**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | | |
|---|---|---|
| STC/CC.No. | : | CC.No.114/2024 |
| Deposition of Witness for | : | PW – 1 |
| Name and Age | : | கோவிந்தன்–55 |
| Father / Husband Name | : | சின்னசாமி |
| Occupation | : | மேஸ்திரி |
| Village | : | கொல்லப்பட்டி |
| Taluk | : | பாலக்கோடு |

**நாள்** –31.10.2025.

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**Accused Present.**

**அ.சா – 1**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் கொல்லப்பட்டி கிராமத்தில் குடியிருந்து மேஸ்திரி வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கு விபத்தில் இறந்த பெரியசாமி என்னுடைய மகன் ஆவாரர். சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் வெள்ளிசந்தை அருகே ஹாலோ பிரிக்ஸ் கம்பெனிக்கு பக்கத்தில் லாரி மீது மோதி இருசக்கர வாகனத்தின் சென்ற என்னுடைய மகனுக்கு விபத்து ஏற்பட்டதாக பக்கத்து கிராமத்தை சேர்ந்த ரத்தினக்குமார் என்பவர் இரவு சுமார் 8.00 மணிக்கு மேல் தகவல் சொன்னார். சம்பவ இடம் சென்று விபத்தினால் என்னுடைய மகனை ஆம்புலன்ஸ் மூலம் பாலக்கோடு அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்தோம். லாரி ஓட்டுநரை நான் சம்பவ இடத்தில் பார்க்கவில்லை. விபத்து ஏற்படுத்திய லாரி ஓட்டுநர் மீது நடவடிக்கை எடுக்ககோரி காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். எனக்கு கையொப்பம் போட தெரியாததால் புகார் மனுவில் பெருவிரல் ரேகை பதிவு செய்தேன். **என்னிடம் காட்டப்படும் அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பாலக்கோடு அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் நடந்த பிரேத விசாரணையில் உடன் இருந்தேன். இது குறித்து போலிசார் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்த என் மகன் என்ன படித்துள்ளார் என்றால் 2 டிகிரி முடித்துள்ளார். அவர் என்ன வேலை செய்து கொண்டிருந்தார் என்றால் மேஸ்திரி வேலை செய்து கொண்டிருந்தார். எனது மகனுக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளதா என்றால் இல்லை. சம்பவம் நடைப்பெறும் போது நான் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை – இல்லை.**

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2025.10.31 17:24:47 +0530

Judicial Magistrate,
Palacode.

**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | | |
|---|---|---|
| STC/CC.No. | : | CC.No.114/2024 |
| Deposition of Witness for | : | PW – 2 |
| Name and Age | : | சாந்தி–47 |
| Father / Husband Name | : | கோவிந்தன் |
| Occupation | : | கூலி |
| Village | : | கொல்லப்பட்டி |
| Taluk | : | பாலக்கோடு |

**நாள்** –31.10.2025.

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**Accused Present.**

**அ.சா – 2**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் கொல்லப்பட்டி கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கு விபத்தில் இறந்த பெரியசாமி என்னுடைய மகன் ஆவாரர். சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் வெள்ளிசந்தை அருகே என்னுடைய மகனுக்கு வாகனவிபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டு பாலக்கோடு அரசு மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்த உடலை பார்த்தேன். பாலக்கோடு அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் நடந்த பிரேத விசாரணையில் உடன் இருந்தேன். இது குறித்து போலிசார் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடைப்பெறும் போது நான் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை – இல்லை.**

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2025.10.31 17:25:00 +0530

Judicial Magistrate,
Palacode.

**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | | |
|---|---|---|
| STC/CC.No. | : | CC.No.114/2024 |
| Deposition of Witness for | : | PW – 3 |
| Name and Age | : | வேலுசாமி–33 |
| Father / Husband Name | : | சின்னசாமி |
| Occupation | : | மேஸ்திரி |
| Village | : | கொல்லப்பட்டி |
| Taluk | : | பாலக்கோடு |

**நாள்** –31.10.2025.

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**Accused Present.**

**அ.சா – 3**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் கொல்லப்பட்டி கிராமத்தில் குடியிருந்து மேஸ்திரி வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கு விபத்தில் இறந்த பெரியசாமி எனக்கு மச்சான் உறவுமுறை ஆவார். கடந்த 18.10.2023 ஆம் தேதி இரவு சுமார் 8.45 மணிக்கு வெள்ளிசந்தையில் இருந்து மாரண்டஅள்ளி செல்லும் சாலையில் ஹாலோ பிரிக்ஸ் கம்பெனிக்கு அருகே போர்வெல் போட்டுக்கொண்டிருந்ததால் அந்த இடத்தில் புகைமூட்டம் சூழ்ந்திருந்ததாகவும் அதனால் இருசக்கர வாகனத்தில் சென்ற பெரியசாமிக்கு முன்னால் Eicher லாரி சென்று கொண்டிருந்தபோது லாரி திடிரென நிறுத்தப்பட்டதால் பின்னால் வந்த பெரியசாமி லாரியின் மீது மோதி ஏற்பட்ட விபத்தில் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாக எனக்க தெரிந்தவர் போன் மூலம் தகவல் சொல்ல நான் சம்பவ இடம் சென்று பார்த்தேன். அங்கு Eicher லாரி நின்றிருந்தது. லாரி ஓட்டுநர் அப்போது அங்கு இல்லை. சம்பவ இடம் சென்று விபத்தினால் இறந்த பெரியசாமியை மகனை ஆம்புலன்ஸ் மூலம் பாலக்கோடு அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்தோம். பாலக்கோடு அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் நடந்த பிரேத விசாரணையில் உடன் இருந்தேன். இது குறித்து போலிசார் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எத்ததை ஆண்டுகளாக மேஸ்திரி வேலை செய்கிறேன் என்றால் 15 ஆண்டுகளாக செய்கிறேன். விபத்தில் இறந்தவர் எத்தனை ஆண்டுகளாக மேஸ்திரி வேலை செய்தார் என்றால் 10 ஆண்டுகளாக செய்தார். சம்பவம் நடைப்பெறும் போது நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், கேள்விப்பட்டு தான் நான் சம்பவ இடம் சென்றேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை – இல்லை.**

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2025.10.31 17:25:17 +0530

Judicial Magistrate,
Palacode.

**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | | |
|---|---|---|
| STC/CC.No. | : | CC.No.114/2024 |
| Deposition of Witness for | : | PW – 4 |
| Name and Age | : | மாதேஷ்–52 |
| Father / Husband Name | : | சின்னசாமி |
| Occupation | : | மேஸ்திரி |
| Village | : | கொல்லப்பட்டி |
| Taluk | : | பாலக்கோடு |

**நாள்** –31.10.2025.

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**Accused Present.**

**அ.சா – 4**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் கொல்லப்பட்டி கிராமத்தில் குடியிருந்து மேஸ்திரி வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கு விபத்தில் இறந்த பெரியசாமி எனக்கு அண்ணன் மகன் ஆவார். கடந்த 18.10.2023 ஆம் தேதி இரவு சுமார் 8.45 மணிக்கு வெள்ளிசந்தையில் இருந்து மாரண்டஅள்ளி செல்லும் சாலையில் ஹாலோ பிரிக்ஸ் கம்பெனிக்கு அருகே போர்வெல் போட்டுக்கொண்டிருந்ததால் அந்த இடத்தில் புகைமூட்டம் சூழ்ந்திருந்ததாகவும் அதனால் இருசக்கர வாகனத்தில் சென்ற பெரியசாமிக்கு முன்னால் Eicher லாரி சென்று கொண்டிருந்தபோது லாரி திடிரென நிறுத்தப்பட்டதால் பின்னால் வந்த பெரியசாமி லாரியின் மீது மோதி ஏற்பட்ட விபத்தில் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாக எனக்கு தெரிந்தவர் போன் மூலம் தகவல் சொல்ல நான் மருத்துவமனைக்கு சென்று அவரது உடலை பார்த்தேன். பாலக்கோடு அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் நடந்த பிரேத விசாரணையில் உடன் இருந்தேன். இது குறித்து போலிசார் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடைப்பெறும் போது நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், கேள்விப்பட்டு தான் நான் சம்பவ இடம் சென்றேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை – இல்லை.**

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2025.10.31 17:25:24 +0530

Judicial Magistrate,
Palacode.

**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | | |
|---|---|---|
| STC/CC.No. | : | CC.No.114/2024 |
| Deposition of Witness for | : | PW – 5 |
| Name and Age | : | முருகன்–40 |
| Father / Husband Name | : | சின்னசாமி |
| Occupation | : | மேஸ்திரி |
| Village | : | கொல்லப்பட்டி |
| Taluk | : | பாலக்கோடு |

**நாள்** –31.10.2025.

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**Accused Present.**

**அ.சா – 5**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் கொல்லப்பட்டி கிராமத்தில் குடியிருந்து மேஸ்திரி வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கு விபத்தில் இறந்த பெரியசாமி எனக்கு மச்சான் உறவுமுறை ஆவார். கடந்த 18.10.2023 ஆம் தேதி இரவு சுமார் 8.45 மணிக்கு வெள்ளிசந்தையில் இருந்து மாரண்டஅள்ளி செல்லும் சாலையில் ஹாலோ பிரிக்ஸ் கம்பெனிக்கு அருகே போர்வெல் போட்டுக்கொண்டிருந்ததால் அந்த இடத்தில் புகைமூட்டம் சூழ்ந்திருந்ததாகவும் அதனால் இருசக்கர வாகனத்தில் சென்ற பெரியசாமிக்கு முன்னால் Eicher லாரி சென்று கொண்டிருந்தபோது லாரி திடிரென நிறுத்தப்பட்டதால் பின்னால் வந்த பெரியசாமி லாரியின் மீது மோதி ஏற்பட்ட விபத்தில் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாக எனக்க தெரிந்தவர் போன் மூலம் தகவல் சொல்ல நான் மருத்துவமனை சென்று பார்த்தேன். பாலக்கோடு அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் நடந்த பிரேத விசாரணையில் உடன் இருந்தேன். இது குறித்து போலிசார் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடைப்பெறும் போது நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், கேள்விப்பட்டு தான் நான் சம்பவ இடம் சென்றேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை – இல்லை.**

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2025.10.31 17:25:38 +0530

Judicial Magistrate,
Palacode.

**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | | |
|---|---|---|
| STC/CC.No. | : | CC.No.114/2024 |
| Deposition of Witness for | : | PW – 6 |
| Name and Age | : | ரத்தினக்குமார்–31 |
| Father / Husband Name | : | முனிரத்தினம் |
| Occupation | : | சொந்த தொழில் |
| Village | : | ஓட்டுப்பட்டி |
| Taluk | : | பாலக்கோடு |

**நாள்** –31.10.2025.

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**Accused Present.**

**அ.சா – 6**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் ஓட்டுப்பட்டி கிராமத்தில் குடியிருந்து செல்போன் கடை வைத்து சொந்த தொழில் செய்து வருகிறேன். இவ்வழக்கு விபத்தில் இறந்த பெரியசாமி எனக்கு தெரியும். அவர் பக்கத்து கிராமத்தை சேர்ந்தவர் ஆவார். கடந்த 18.10.2023 ஆம் தேதி இரவு சுமார் 8.45 மணிக்கு வெள்ளிசந்தையில் இருந்து மாரண்டஅள்ளி செல்லும் சாலையில் அன்பு ஹாலோ பிரிக்ஸ் கம்பெனிக்கு அருகே போர்வெல் போட்டுக்கொண்டிருந்ததால் அந்த இடத்தில் புகைமூட்டம் சூழ்ந்திருந்ததால் நான் இருசக்கர வாகனத்தில் மாரண்டஅள்ளி நோக்கி சென்றுகொண்டிருந்தபோது எனக்கு முன்னால் பெரியசாமி யுனிகான் இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தார். பெரியசாமிக்கு முன்னால் Eicher லாரி சென்று கொண்டிருந்தபோது லாரி திடிரென நிறுத்தப்பட்டது. அப்போது லாரியை எந்தவித இண்டிகேட்டர் சிக்கனல் போடாததால் பின்னால் வந்த பெரியசாமி லாரியின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. நான் உடனே அருகில் சென்று பார்க்க பேச்சு மூச்சின்றி பலத்த காயங்களுடன் பெரியசாமி கீழே விழுந்து கிடந்தார். நான் அவருடைய தந்தைக்கு போன் மூலம் தகவல் சொல்ல அவர் சம்பவ இடத்திற்கு வந்த பின் பெரியசாமி இறந்துவிட்டததை அறிந்துக்கொண்டு ஆம்புலன்ஸ் மூலம் பாலக்கோடு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். விபத்து ஏற்படுத்திய Eicher லாரி ஓட்டுநரை நான் சம்பவ இடத்தில் பார்த்தேன். அவரை என்னால் அடையாளம் காட்ட இயலும். ஆஜர் எதிரி தான் லாரி ஓட்டுநர் ஆவார். இது குறித்து போலிசார் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்தவரை எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்றால் நாங்கள் 10 ஆம் வகுப்பு ஒன்றாக படித்தோம். லாரி என்ன வேகத்தில் சென்றது என எனக்கு தெரியுமா என்றால் புகைமூட்டமாக இருந்ததால் லாரியின் வேகம் எனக்கு தெரியவில்லை. நான் லாரியில் இருந்து எவ்வளவு தூரம் தள்ளி பயணித்தேன் சுமார் 100 மீட்டர் தூரத்தில் பயணித்தேன். சம்பவ என்ன நேரத்தில் நடந்தது என்றால் இரவு 8.45 அளவில் நடந்தது. லாரி வாகனத்திற்கும் எனது வாகனத்திற்கும் இடையே வேறு வாகனம் சென்றதா என்றால் பெரியசாமி தவிர வேறு யாரும் செல்லவில்லை. போர் யார் போட்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. போர் போட்ட நபர் புகைமூட்டம் இருப்பது சம்மந்தமாக எச்சரிக்கை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. போர் போட்டதால் தான் புகைமூட்டம் ஏற்பபட்டது அது சம்மந்தமாக

அதன் உரிமையாளரிடம் பேசினோமா என்றால் இல்லை. புகைமூட்டமாக இருந்ததால் எதிரி வாகனத்தை சாலையில் இடது ஓரமாக நிறுத்திவைத்திருந்தார் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் சமிக்கை விளக்குகள் லாரியில் ஒளிரவிடப்பட்டிருந்ததா என்றால் இல்லை. விபத்தில் இறந்தவருக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளதா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எதிரி புகைமூட்டமாக இருந்ததால் வாகனத்தை சாலையின் ஓரத்தில் நிறுத்திவிட்டு சமிக்கை விளக்குகளை ஒளிரவிடப்பட்டு லாரியை ஓரமாக நிறுத்தியிருந்தார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2025.10.31 17:25:45 +0530

Judicial Magistrate,
Palacode.